TNTV150005232025

# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்

**முன்னிலை:** M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS),
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
குடவாசல்.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ஆம் நாள் செவ்வாய்கிழமை

STC. No. 231 of 2025

CNR No. TNTV15-000523 -2025

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
எரவாஞ்சேரி காவல் நிலையம்,
குற்ற எண். 493/2021 ----- குற்றமுறையிடுபவர்

- எதிர் -

1. சந்திரஹாசன், 68/2026,
த/பெ. பெரியசாமி,
தெற்கு தெரு, நமலி.
2. பாஸ்கர், 64/2026,
த/பெ. மெயாக்கண்ணு,
காணிக்கரை தெரு,
மணத்தங்குடி.
3. நடராஜன், 75/2026,
த/பெ. ராசு,
கலுங்கடி தெரு, திருவிழிமிழலை.
5. ராஜேந்திரன், 65/2026,
த/பெ. மருதமுத்து,
மெயின் ரோடு, அதம்பாவூர். ------ எதிரிகள்

*Statement as per rule 106 of criminal rules of practice, 2019*



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.21 10:30:01 +0530

| S.No | Description | Details |
|---|---|---|
| 1. | Serial Number | Summary Trial Case (S.T.C) No.231 of 2025 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by Sub-Inspector of Police, Eravanchery PS. in Cr.No.493/2021 |
| 3. | Name of the accused | 1.P.Chandrahasan<br>2. M.Baskar<br>3. R.Nadarajan<br>5. M.Rajendiran |
| 4. | Father's Name | S/o. Periyasamy<br>S/o. Meyakkanu<br>S/o. Rasu<br>S/o. Maruthamuthu |
| 5. | Occupation | - |
| 6. | Residence | A1-South Street, Namali<br>A2-Kanikarai Street, Manathangudi<br>A3-Kalungadi Theru, Thiruvizhimizhalai<br>A5-Main Road Adhambavur. |
| 7. | Age | 68/2026<br>64/2026<br>75/2026<br>65/2026 |
| 8. | Date of occurrence | 27.09.2021 |
| 9. | Date of complaint<br>Date of filing Charge sheet | 27.09.2021<br>27.09.2021 |
| 10. | Date of apprehension | - |
| 11. | Date of release on bail | - |
| 12. | Date of commitment | Not applicable |



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.21 10:30:07 +0530

<table>
<tr><td>13.</td><td>Date of furnishing copies of document U/s 207 Cr.P.C.</td><td colspan="3">06.04.2026</td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td colspan="3">On 18.04.2026 the accused questioned on substance of accusation U/s 143,341,270 IPC.<br>Accused denied as false case and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td rowspan="3">15</td><td rowspan="3">Date of commencements of trial -The date of examination – in chief and cross-examination of a witness</td><td>Witnesses</td><td>Examined in – Chief</td><td>Examined - in Cross</td></tr>
<tr><td>PW1</td><td>16.04.26</td><td>16.04.26</td></tr>
<tr><td>PW2</td><td>16.04.26</td><td>16.04.26</td></tr>
<tr><td>16.</td><td>The date of examination of the accused under section 313 of the code – Closed of trial</td><td colspan="3">18.04.2026</td></tr>
<tr><td>17.</td><td>Sentence on order</td><td colspan="3">முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவு 143,341,270 இதச-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளில் இருந்து எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.</td></tr>
<tr><td>18.</td><td>Service of copy of Judgment or finding on accused</td><td colspan="3">No. The Judgment was uploaded on CIS portal and made available in E- Courts</td></tr>
<tr><td>19.</td><td>Explanation of delay</td><td colspan="3">There is no inordinate in the disposal of the case</td></tr>
<tr><td>20.</td><td>Property order</td><td colspan="3">No case property was seized and hence no property order passed.</td></tr>
</table>



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.21 10:30:12 +0530

இவ்வழக்கானது இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வந்தும், குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-1 அவர்கள் ஆஜராகியும், சாட்சிய சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலினையிலிருந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

**<u>அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்</u>** :-

1. 04.04.2022 ந் தேதி காலை 10.50 மணி முதல் 11.20 மணிவரை எரவாஞ்சேரி கடைத்தெருவில் இவ்வழக்கின் 1 ஆம் எதிரியின் தலைமையில் 2 முதல் 5 ஆம் எதிரிகளாகிய நீவிர் ஒன்று கூடி பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு கேஸ் விலை ஏற்றத்தை எதிர்த்து மத்திய அரசை கண்டித்து எவ்வித அனுமதியோ முன் அனுமதியோ பெறாமல் சட்ட விரோதமாக ஒன்று கூடி பொதுமக்களை வழிமறித்தும் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டும் குற்றம்புரிந்துள்ளதால் எதிரிகள் மீது சட்டப் பிரிவுகள் 143, 341. 270 இதச ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக புரிந்துள்ளதாக இவ்வழக்கின் விசாரணை அதிகாரியால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்நீதிமன்றத்தால் மேற்படி குற்ற இறுதி அறிக்கையும், மற்ற ஆவணங்களையும் பரிசீலனை செய்து வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கை அதனுடன் இணைந்த ஆவணங்களை பரிசீலினை செய்தபோது எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் வனைவதற்கு



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.21 10:30:18 +0530

போதிய முகாந்திரம் இருந்த காரணத்தினால் எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 143, 341 இதச வின் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி கூறி வினவியபோது எதிரிகள் தன் மீதான குற்றத்தை மறுத்து தான் குற்றவாளி இல்லை என கூறினார்கள். அதன் பின்னர் அரசுத்தரப்பில் சாட்சியமளிக்க உத்தரவிடப்பட்டது.

5. இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் அரசு தரப்பு சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 சான்றாவணம் முன்னிடப்பட்டுள்ளது.

6. <u>இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அறியப்பெரும் அரசு தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு</u> :-

(i) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.1 அவரது சாட்சியத்தில், தான் தற்சமயம் குடவாசல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 2021ம் வருடம் நான் எரவாஞ்சேரி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த போது கடந்த 27.09.2021ம் தேதி அன்று காலை 11.30 மணியளவில் எரவாஞ்சேரி காவல் நிலையத்தில் பணியிலிருந்த போது உதவி ஆய்வாளர் திரு. ஆறுமுகம் என்பவருடன் நானும் தலைமை காவலர் பிரம்மா ஆகியோர்களுடன் எரவாஞ்சேரி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட பகுதியில் ரோந்து பணியில் இருந்த போது எரவாஞ்சேரி கடை தெருவில் கூட்டம் கூடுவதாக மேற்படி உதவி ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின்படி நாங்கள் அங்கு சென்று பார்த்தபோது அன்பழகன், சந்திரகாசன், பாஸ்கர், நடராஜன் மற்றும் பலர் நபர்கள் ஒன்று கூடி உழவர் விரோத சட்டங்கள் மின்சார சட்ட திருத்த மசோதா ஆகியவைகளை ரத்து செய்ய வேண்டுமென்று குறைந்த பட்ச ஆதாரா விலைக்கு சட்ட அங்கீகாரம் பெற வேண்டுமென்று நான்கு தொகுப்பு சட்டங்களை திரும்ப பெறவேண்டுமென்று மேற்படி நபர்கள் அனைவரும் 144 கு.வி.மு.ச. தடை உத்தரவை மீறி



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.21 10:30:24 +0530

சாலையை மறித்து சாலை மறியல் செய்தார்கள் என்றும், இந்த கால கட்டமானது கொரோனா வைரஸ் தாக்குதல் காரணமாக தடைஉத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது என்றும், மேற்படி நபர்கள் கூட்டம் கூடி சாலை மறியல் செய்வதற்கு ஆர்பாட்டம் செய்வதற்கும் எவ்வித முன் அனுமதியோ பெறவில்லை. மேற்படி நபர்களிடம் சட்ட விரோதமாக கூட்டம் கூடி பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தியவர்களிடம் எச்சரித்தும் அதை கேளாமல் கோஷம் போட்டுவிட்டு 11.30 மணிமுதல் 11.45 வரை போராட்டம் செய்தவர்களை கைது செய்த முற்பட்ட போது தன்னிச்சையாக கலைந்து சென்றுவிட்டார்கள். பின்னர் உதவி ஆய்வாளர் நிலையம் வந்து எதிரிகள் மீது காவல் நிலைய குற்ற எண் 493/2021 இதச சட்டப்பிரிவுகள் 143, 341, 270 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், உதவி ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(ii) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.2 அவரது சாட்சியத்தில், தான் தற்போது எரவாஞ்சேரி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை மற்றும் புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் திரு.ஆறுமுகம் என்பவர் பணி ஓய்வு பெற்று உடல் நிலை சரியில்லாமல் சாட்சியமளிக்க இயலாத நிலையில் உள்ளதாலும் மேற்படி உதவி ஆய்வாளரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் நன்கு தெரியும் என்ற அடிப்படையில் நீதியின் நலன்கருதி காலதாமதத்ததை தவிர்க்கும் பொருட்டு நான் இவ்வழக்கு கோப்பு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன் என்றும், கடந்த 27.09.2021ம் தேதி அன்று காலை 11.30 மணியளவில் எரவாஞ்சேரி காவல் நிலையத்தில் பணியிலிருந்த போது உதவி ஆய்வாளர் திரு. ஆறுமுகம் என்பவருடன் தலைமை காவலர்கள் பிரம்மா மற்றும் சுரேஷ் ஆகியோர்களுடன் எரவாஞ்சேரி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.21 10:30:29 +0530

பகுதியில் ரோந்து பணியில் இருந்த போது எரவாஞ்சேரி கடை தெருவில் கூட்டம் கூடுவதாக மேற்படி உதவி ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின்படி மேற்படி போலீசார் அங்கு சென்று பார்த்தபோது அன்பழகன், சந்திரகாசன், பாஸ்கர், நடராஜன் மற்றும் பலர் நபர்கள் ஒன்று கூடி உழவர் விரோத சட்டங்கள் மின்சார சட்ட திருத்த மசோதா ஆகியவைகளை ரத்து செய்ய வேண்டுமென்று குறைந்த பட்ச ஆதாரா விலைக்கு சட்ட அங்கீகாரம் பெற வேண்டுமென்று நான்கு தொகுப்பு சட்டங்களை திரும்ப பெறவேண்டுமென்று மேற்படி நபர்கள் அனைவரும் 144 கு.வி.மு.ச. தடை உத்தரவை மீறி சாலையை மறித்து சாலை மறியல் செய்துள்ளார்கள் என்றும், அந்த கால கட்டமானது கொரோனா வைரஸ் தாக்குதல் காரணமாக தடைஉத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது என்றும், மேற்படி நபர்கள் கூட்டம் கூடி சாலை மறியல் செய்வதற்கு ஆர்பாட்டம் செய்வதற்கும் எவ்வித முன் அனுமதியோ பெறவில்லை என்றும், மேற்படி நபர்களிடம் சட்ட விரோதமாக கூட்டம் கூடி பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தியவர்களிடம் மேற்படி உதவி ஆய்வாளர் எச்சரித்தும் அதை கேளாமல் கோஷம் போட்டுவிட்டு 11.30 மணிமுதல் 11.45 வரை போராட்டம் செய்தவர்களை கைது செய்ய முற்பட்ட போது தன்னிச்சையாக கலைந்து சென்றுவிட்டார்கள் என்றும், பின்னர் உதவி ஆய்வாளர் நிலையம் வந்து எதிரிகள் மீது காவல் நிலைய குற்ற எண் 493/2021 இதச சட்டப்பிரிவுகள் 143, 341, 270 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், (**அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கைஅ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 1முதல் 2 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார் என்றும், பின்னர் எதிரிகளளை தேடிவந்த நிலையில் எதிரிகள் தலைமறைவாகிவிட்டார்கள் என்றும், இத்துடன் அவரது புலன் விசாரணை முடித்து எதிரிகளின் செய்கையானது இதச சட்டப்பிரிவுகள் 143, 341 , 270 ன் கீழ் தண்டித்தக்க குற்றம் என கடந்த



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.21 10:30:33 +0530

27.09.2021ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சிமளித்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிகளை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)-ன் படி வினவியபோது எதிரிகள் "பொய் சாட்சி" என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் "இல்லை" என்று கூறினார்கள். இவ்வழக்கில் கு.வி.மு.ச.பிரிவு 320-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

8. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

9. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிகள் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

10. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இவ்வழக்கு சம்பவமானது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

11. இவ்வழக்கின் எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், இவ்வழக்கில் சாட்சிகளிடம் காணப்படும் குறைபாடுகளை சுட்டிக் காண்பித்து அதனால் ஏற்பட்டுள்ள சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

12. **<u>அரசு தரப்பு சாட்சியங்களை மதிப்பிடுதல்</u>**:-



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.21 10:30:39 +0530

12. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களும், அ.சா.1 மற்றும் அ.சா.2-ன் சாட்சியத்தை பரிசீலிக்கும்போது, உழவர் விரோத சட்டங்கள் மின்சார சட்ட திருத்த மசோதா ஆகியவைகளை ரத்து செய்ய வேண்டுமென்று குறைந்த பட்ச ஆதாரா விலைக்கு சட்ட அங்கீகாரம் பெற வேண்டுமென்று நான்கு தொகுப்பு சட்டங்களை திரும்ப பெறவேண்டுமென்று மேற்படி நபர்கள் அனைவரும் 144 கு.வி.மு.ச. தடை உத்தரவை மீறி சாலையை மறித்து சாலை மறியல் செய்தார்கள் என்றும் கூறி சாட்சியம் அளித்துள்ளார்கள்.

13. அரசு தரப்பில் எதிரிகள் முன் அனுமதி பெறாமல் பொதுமக்களுக்கு இடையூறாக கூட்டம் கூடினார்கள் என்பதற்கு ஆதரவாக தனி நபர் சாட்சிகள் யாரும் இவ்வழக்கில் விசாரணை செய்யப்படவில்லை. இத்தகைய சூழ்நிலையில் குற்றத்தை உறுதிப்படுத்வதற்காக தனிப்பட்ட சாட்சிகள் அவசியமாக கொண்டுவரப்பட வேண்டும். ஆனால், இவ்வழக்கில் எவ்வித தனிப்பட்ட சாட்சிகளும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இவ்வழக்கில் சாட்சியம் அளித்த அனைவரும் காவல் அதிகாரிகளே ஆவார்கள். இவர்களின் சாட்சியத்தை வெறும் அதிகார பூர்வமான சாட்சிகளாக இருப்பதற்காகவே தள்ளுபடி செய்ய முடியாது என்றாலும், தனிப்பட்ட சாட்சிகள் எளிதில் கிடைக்கும் பட்சத்தில் எந்த பொது சாட்சியமும் கொண்டு வரப்படாத நிலையில் இவர்களின் சாட்சியம் நம்பகத்தன்மை அற்றதாக மாறுகிறது.

14. மேலும், இவ்வழக்கில் புகார்தாரரும் குற்றஅறிக்கை தாக்கல் செய்தவரும் காவல் ஆய்வாளரே ஆவார். இவ்வாறு புகார்தாரரும் விசாரணை அதிகாரியும் ஒரே நபராக இருப்பது இயற்கைநீதி கோட்பாடுக்கு எதிராக அமைவதாக உள்ளது. மேலும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கையை பரிசீலினை செய்கையில் எதிரிகளின் பெயருடன் 15 ஆண்கள் என்று பொதுவாக குறிபிடப்பட்டுள்ளது. எனவே, எதிரிகளின் பெயரை மட்டும் குறிப்பிட்டு சொல்லியுள்ள நிலையில் மற்ற நபர்களின் பெயரை குறிப்பிடமால் ஆண்கள் என்று பொதுவாக குறிப்பிட்டுள்ளது அரசு தரப்பு வழக்கின் நம்பகத்தன்மையை கேள்வியாக்கியுள்ளது.



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.21 10:30:44 +0530

15. மேலும், சம்பவ இடம் மக்கள் அதிகம் நடமாடும் இடமாக இருந்தாலும், எதிரிகளை அடையாளப்படுத்த தனிநபர் சாட்சியம் யாரும் இவ்வழக்கில் விசாரிக்கப்படவில்லை என்பதிலிருந்தும், சம்பவயிடம் குறித்து பார்வை மகசரோ, மாதிரி வரைபடமோ இவ்வழக்கில் தயார் செய்யப்படவில்லை போன்ற குறைபாடுகள் அரசுத்தரப்பு வழக்கின் மீது மிகுந்த சந்தேகத்தை ஏற்படுத்தி அதை நம்பகத்தன்மையற்றதாக செய்கிறது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, அதனால் ஏற்பட்டுள்ள சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்வது உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

16. எனவே, இவ்வழக்கில் எதிரிகளின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 143,341,270 இதச கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**<u>உத்தரவு</u>**

17. முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 143,341,270 இதச வின் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

18. எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகும் என்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சான்றுபொருட்கள் ஏதும் தாக்கல் செய்யப்படாத காரணத்தினால் அதனை பொறுத்து உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை.



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.21 10:30:48 +0530

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணினியில் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஏபரல் திங்கள் 21-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.21 10:30:54 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. சுரேஷ் |
| அ.சா.2 | திரு.சாமுவேல்-காவல் உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 27.09.2021 | முதல் தகவல் அறிக்கை |

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:- இல்லை

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்**:- இல்லை

MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.21 10:30:59 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.

**<u>வழக்கு சுருக்கம்</u>**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | - | | |
| 2. | குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 24.09.2025 | | |
| 3. | குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்ட நாள் | 06.04.2026 | | |
| 4. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | - | | |
| 5. | சாட்சிகள் விசாரணை | **Witness** | **Date of Chief** | **Date of Cross** |
| | | PW-1 : | 16.04.26 | 16.04.26 |
| | | PW-2 : | 16.04.26 | 16.04.26 |
| 6. | கு.வி.மு.ச. பிரிவு 313-ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 18.04.2026 | | |
| 7. | எதிரி தலைமறைவு காலம் பற்றிய விபரம் | - | | |
| 8. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விபரங்கள் | - | | |

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.21 10:31:04 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.